தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்


ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-

மலர் 26

இதழ் 03

ஜீலை 2024


மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்







முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

ஒற்றுமைக்கும், அயராத உழைப்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களுடன் எனது கருத்துக்களை பகிர்ந்து கொள்வது எனக்கு பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

மகளிர் முன்னேற்றம் பெற வேண்டும் என்பதற்காகத் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இன்று மாநிலம் முழுவதும் பரந்து விரிந்து மிகப் பெரிய இயக்கமாக வளர்ந்துள்ளது. அனைத்துத் துறைகளிலும் சுய உதவிக் குழுப் பெண்களின் சாதனைகள் தொடர்கின்றன. தனது கிராமத்தையே தாண்டாத பாமரப் பெண் கூட குழுவில் இணைந்து செயல்படுவதன் மூலம் நாடே பாராட்டும் அளவிற்கு பெருமை பெற்றுள்ளதை அறியும் போது சுய உதவிக் குழுவினரான உங்களை பாராட்டுவதில் எனக்கு என்றுமே மகிழ்ச்சிதான்

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு மேலும் வலிவு சேர்க்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடரில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இந்த அறிவிப்புகளை விரைந்து நடைமுறைப்படுத்திட, முனைப்புடன் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்”**

என்ற குறள் வரிகளுக்கேற்ப இணைந்து செயலாற்றுவதில் ஏற்றமுடையவராக இருக்கும் நமது மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எண்ணியதை எண்ணியவாறே அடைய வேண்டுமாயின், மகளிர் நலனில் அக்கறை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி, மற்றவர்களுக்கும் அத்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அத்திட்டங்களின் பயன் அனைவரையும் சென்றடையச் செய்ய வேண்டும் நம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிருக்கான அனைத்துத் திட்டங்களும் முழுமையடைவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஏழை எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாடுகளுக்கு உரியவர்களாக இருக்கும் நீங்கள், உங்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவற்றைத் தகர்த்து, மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்!!!

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

சுய உதவிக் குழு மகளிரின் அன்பு தோழியான முற்றத்தின் வாயிலாக உங்களை மாதந்தோறும் சந்தித்து, எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காகவும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் நம் தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களை சுய உதவிக் குழு மகளிரிடம் கொண்டு சேர்க்கும் உன்னத பணியை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டிற்காக, 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, 4,000 தனி நிறுவனங்கள் மற்றும் 75 குழு நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி மற்றும் உயர் மகசூல் தரும் கரும்பு ரகங்களின் பரு நாற்றுக்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த மகளிர் விவசாயிகளுக்கு சுழல் நிதி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

மேலும், 40,000 கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி, ஊரகப் பகுதியில் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி, 7,500 தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி, சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் வளர் இளம் பெண்களுக்கு மாதவிடாய் கால சுகாதார மேலாண்மை குறித்த பயிற்சி, அனைத்து சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கும் சட்ட விழிப்புணர்வு பயிற்சி மற்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் ஈடுபடும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு உணவு தயாரித்தல் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும் என்றம் அறிவித்துள்ளார்கள்.

இவைகள் மட்டுமின்றி, சிறுதானிய போட்டிகள் மற்றும் திருவிழாக்கள், மாநிலம் முழுவதும் மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இளைஞர் திறன் திருவிழாக்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திட அடுக்குமாடிக் குடியிருப்பு பகுதிகளில் கண்காட்சிகள் நடத்தப்படும் என்று அறிவித்ததுடன், பெருநகர சென்னை மாநகராட்சியில் 8 இடங்களில் மகளிர் கஃபே மற்றும் 37 மாவட்டங்களில் 111 வானவில் மையங்கள் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டிற்காக அரசு மேற்கொண்டு வரும் இத்தகைய நலத் திட்டங்களை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி அனைவரும் பொருளாதார வளர்ச்சி பெற்று, நாட்டையும் முன்னேற்றப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று சுய உதவிக் குழுவினரான உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

*மீண்டும் சந்திப்போம்...*

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

சுய உதவிக் குழு மகளிரின் உற்றத் தோழியான முற்றம் மாத இதழின் வாயிலாக மாதந்தோறும் உங்களை சந்திப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் நிகழ்வாக இருக்கிறது. “ஒற்றுமையே உயர்வு” என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழும் நீங்கள் உங்களின் அயராத உழைப்பால் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து வருவது நமது இயக்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஒரு திட்டத்தின் வெற்றி என்பது அதனால் விளையும் பயன்கள்தான். திட்டத்தினால் பயன் பெற்றவர்களின் மகிழ்ச்சியும், அவர்கள் பெற்ற வளர்ச்சியும் தான் திட்டத்தின் வெற்றிக்கு அச்சாரமாகும். நமது தமிழ்நாடு அரசும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அதை வெற்றிகரமாக செயல்படுத்தியும் வருகின்றது என்பதை அனைவரும் அறிவார்கள்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் சின்னஞ்சிறு இயக்கமாக உருவாகிய மகளிர் சுய உதவிக் குழு இயக்கமானது இன்று “ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி” மகளிரின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது. இதற்குக் காரணமான உங்களுக்கு எனது வாழ்த்துகள்.

“பெண்கள் நாட்டின் கண்கள்” என்ற கூற்றிற்கு ஏற்ப, பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாடுகளின் விளைவாக பல துறைகளில் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். மேலும் அனைத்துத் துறைகளிலும் இன்று சுய உதவிக் குழு இயக்கம் சிறப்பான இடத்தில் உள்ளது. அதற்கு மேலும் அணி சேர்ப்பது போல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அவர்களும் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளனர்.

அரசின் ஆக்கப்பூர்வமான திட்டங்களைப் பயன்படுத்தி, நீங்கள் உங்களின் வாழ்வை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது மட்டுமல்லாமல், சமூக நலனிலும் அக்கறை காட்ட வேண்டும். உங்களுக்கு ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் என்றும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,
ஸ்ரேயா.
(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்**

– (குறள்: 394)

மகிழ்ச்சி பொங்கிடச் சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும்போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும்.

# உள்ளே...




7 திறன்மிகு வகுப்பறைகளை துவக்கி வைத்தல்



15 தாயுமானவர் திட்டம் குறித்து புரிந்துணர்வு பயிற்சி



11 திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பதிலுரை



17 மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அறிவித்த அறிவிப்புகள்



14 ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல் பாடுகள் ஆய்வு



34 கோதுமை ரவை பொங்கல்


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
# முற்றம்
விலை ரூ. 20/- • மலர் 26 • இதழ் 03 • ஜூலை 2024


கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413


முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# சிறு துளி பெரு வெள்ளம்....



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

தமிழ்நாட்டில் பெரும்பாலான மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனாலும், பெரும்பாலான குழுக்கள் கடன் உதவி பெறுவதில் மட்டுமே மிக அதிகமான கவனத்தை செலுத்தி வருகின்றனர் என்பது வளர்ச்சி அல்ல. கடன் உதவி அவசியமான ஒன்றுதான். ஆனால், உறுப்பினர்கள் எந்த நோக்கத்திற்காக கடன் பெற்றார்களோ, அந்த நோக்கத்திற்கு கடன் தொகையை செலவிடுகின்றனரா என கண்காணிக்கும் பொறுப்பு அந்த குழுவிற்கு உள்ளது என்பதை மறந்து விடக்கூடாது.

குழுவில் சேமிப்பு என்பது தவிர்க்கக் கூடாத மற்றொரு முக்கிய செயல்பாடாகும். இந்த சேமிப்பானது குழுவை ஒற்றுமையாக வைத்துக் கொள்ள உதவுகின்றது. அவசர தேவைகளுக்கு சிறுகடனாக பெற்று கொள்ளவும் உதவும். அதோடு, உறுப்பினர்களின் தொடர் சேமிப்பு வங்கிகளுக்கும், அரசுக்கும் அக்குழுவின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தி பெரிய அளவில் கடன் உதவி பெற வழிவகுக்கும்.

பல குழுக்கள் வார சேமிப்பு செய்து வருவதும், பல உறுப்பினர்கள் விருப்ப சேமிப்பு செய்து வருவதும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். அதே வேளையில், சில குழுக்கள் சேமிப்பே செய்வதில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். மழையிலும் வெயிலிலும் பாடுபட்டு, இரத்த வியர்வை சிந்தி, தங்களின் ஆசைகளையும் விருப்பங்களையும் தியாகம் செய்து சேமிப்பாக குழுவில் செலுத்தும் அந்த சேமிப்பிற்கான சரியான கணக்கை பராமரித்து வைப்பது ஊக்குநர்களின் கடமையாகும். பொருளாதாரத்தில் நலிவுற்றிருக்கும் குடும்பங்கள் உயர்வடைய குழு சேமிப்பும் கடனுதவியும் பெரிய அளவில் கைகொடுத்து வருவதை யாராலும் மறுக்க முடியாது.

சேமிப்பு மற்றும் கடன் வசதிக்கு அப்பாற்பட்டு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களின் உடல் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். அதற்கான முயற்சிகளை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முன்னெடுக்க வேண்டும் என இம்மாதத்தில் வரும் "தேசிய மருத்துவ தினம்" நமக்கு நினைவூட்டுகின்றது.

இப்படிக்கு,



(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்





# அரசுப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளை துவக்கி வைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 14.06.2024 அன்று, சென்னை,ஜவஹர்லால்நேருஉள்விளையாட்டு அரங்கில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், அரசுப் பள்ளிகளில் 455.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,931 திறன்மிகு வகுப்பறைகளை தொடங்கி வைத்தார். இவ்விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர் பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திரு. ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் க. அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# இங்கிலாந்து பல்கலைக் கழகத்தில் நேரடிப் பயிற்சி பெற்று தாயகம் திரும்பிய மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 17.06.2024 அன்று, முகாம் அலுவலகத்தில், “நான் முதல்வன்” மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இணைந்து நடத்திய S.C.O.U.T. (Scholars for Outstanding Undergraduate Talent In Tamil Nadu) திட்டத்தில் இங்கிலாந்தின் டர்ஹம் பல்கலைக் கழகத்தில் தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் நேரடிப் பயிற்சி பெற்று தாயகம் திரும்பிய 25 மாணவ, மாணவியர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர்-1 திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்தியாவிற்கான இயக்குநர் திருமதி. ஜனக புஷ்பநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





# 2026-ம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு பணியிடங்கள் நிரப்பப்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் வாயிலாகவும், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு அரசு அமைப்புகளிலும் மொத்தம் 65 ஆயிரத்து 483 இளைஞர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அரசுப் பணியினை எதிர் நோக்கி இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு மகிழ்ச்சியை தரும் வகையில் வரும் ஜனவரி 2026-க்குள் பல்வேறு அரசுப் பணியிடங்களுக்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 17 ஆயிரத்து 595 பணியிடங்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 19 ஆயிரத்து 260 ஆசிரியப் பணியிடங்களும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 3 ஆயிரத்து 41 பணியிடங்களும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 6 ஆயிரத்து 688 பணியிடங்களும், சமூக நலத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளிட்ட முக்கிய துறைகளில் காலியாக இருக்கக் கூடிய 30 ஆயிரத்து 219 பணியிடங்களும் என சுமார் 75,000க்கும் மேற்பட்ட பணியிடங்கள் வரும் 2026-ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நிரப்பப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.




## குழந்தைகள் பாதுகாப்பிற்கான இணையம் மற்றும் செயலிகள் துவக்கம்

மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 18.06.2024 அன்று பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவிட போக்ஸோ இணைய முகப்பு (POCSO Portal), குழந்தைகளுக்கான தனிநபர் பராமரிப்பு செயலி (Individual Care Plan App), தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைக்காக உருவாக்கப்பட்டுள்ள வலை பயன்பாடு (Web Application), குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆய்வு மற்றும் கண்காணிப்பு செயலி



(Inspection and Monitoring App for Child Care Institution) ஆகியவற்றை துவக்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., சமூக நல ஆணையர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் திரு. அமர் குஷ்வாஹா, இ.ஆ.ப., ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் திருமதி ஜெ.யு. சந்திரகலா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க

# மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்களின் அறிவிப்புகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள், 22.06.2024 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கையின் போது, பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு.




### ஊராட்சி மன்றங்களுக்காக 500 கிராம ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள்

நடப்பாண்டில், பழுதடைந்த நிலையில் உள்ள 500 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு நிதியுடன் ஒருங்கிணைந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தலா ரூ. 30 இலட்சம் வீதம் மொத்தம், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.




### 500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களில் கசிவுநீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களைப் பாதுகாத்து, மேம்படுத்திடும் பொருட்டு கசிவுநீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.




### ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ரூ.60 கோடி செலவில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பெருமளவில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. 2024-25ஆம் ஆண்டிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.




### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திட்ட இயக்குநர்களுக்கு ஐந்து முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் புதிதாக கட்டப்படும்.

2024-25ஆம் ஆண்டில், திருவாரூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் திட்ட இயக்குநர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் தலா 2 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியின் கீழ் புதிதாகக் கட்டப்படும்.




### புதியதாக 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்

2024-25ஆம் ஆண்டில் 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடடங்கள் தலா 6 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் கூறு நிதியில் கட்டப்படும்.




### 5,000 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தானியங்கி முறையில் இயக்கப்படும்.

2024-25ஆம் ஆண்டில், 15-வது மத்திய நிதிக்குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட கூறு (குடிநீர் வழங்கல்) மற்றும் இதர நிதிகள் மூலம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5,000 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள், இணையம் மூலம் தானியங்கி ஆன்/ஆப் இயக்க அமைப்புகள் நிறுவப்படும்.




### புதுக்கோட்டை மாவட்டத்தில்ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகம்

2024-25ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியில் கட்டப்படும்.





### பத்து மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்

கிராமப்புறங்களில் சுகாதாரமான முறையில் மலக்கழிவுகளை அகற்றும் நோக்கில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 10 புதிய மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் (Faecal Sludge Treatment Plant) ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.




### ஊரகப் பகுதிகளில் 500 அரசுப் பள்ளிகளில் ரூ.100 கோடியில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் உள்ள 500 அரசுப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.




### ஊரகப்பகுதிகளில் 500 சிறு பாலஙகள் மொத்தம் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த ஊரக சாலைகளில் குறுக்கே செல்லும் ஓடைகள் மற்றும் வடிகால்கள் மேலாக 500 சிறுபாலங்கள் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும்.

ஊரகப் பகுதிகளில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கண்ட அறிவிப்புகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ஐ. பெரியசாமி அவர்கள் வெளியிட்டுள்ளார்.

# தமிழ்நாடு சட்டமன்றத்தில்
## மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
# திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பதிலுரை

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 27.06.2024 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீது ஆற்றிய பதிலுரையின் சுருக்கம் வருமாறு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீது பதிலுரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், அரசு தலைமை கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும், அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்’ என்றார் பேரறிஞர் அண்ணா. ‘ஆணுக்கு நிகர் பெண் என்று முழங்கினார்’ முத்தமிழறிஞர் கலைஞர். ‘இன்றைக்கு பெண்ணுக்கு நிகர் எவரும் இல்லை’ என்று சொல்லும் அளவிற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தந்து, ஒவ்வொரு மகளிரின் சிரிப்பிலும், அண்ணாவையும், கலைஞரையும், இனமான பேராசிரியரையும், தந்தை பெரியாரையும் கண்டு வருகிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் - கலைஞர் நூற்றாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 1 கோடியே 16 இலட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் என்று, ஒவ்வொரு மகளிருக்கும் இதுவரை, இந்த 10 மாதங்களில், தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 11 ஆயிரத்து 323 கோடி ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நகரப் பேருந்துகளில் மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு கட்டணமில்லா விடியல் பயணம், முதலமைச்சருடைய காலை உணவுத் திட்டம், ‘புதுமைப் பெண்’ திட்டம் என மகளிர் நலனுக்காக அடுக்கடுக்கான திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், நம்முடைய துறையும் மகளிர் நலனுக்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டை ஊக்குவித்திட 2021-2022 முதல் இதுவரை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு என








ரூபாய் 80 ஆயிரத்து 936 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சென்ற நிதியாண்டில், 4 இலட்சத்து 79 ஆயிரத்து 350 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 30 ஆயிரத்து 75 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, இந்த நிதியாண்டில் 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் வங்கிக் கடன் வழங்குவதில் அந்த இலக்கை எட்டுவோம் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம்முடைய 'திராவிட மாடல்' அரசு அமைந்தது முதல் தற்போது வரை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. 2021-2022 முதல் தற்போது வரை 47 ஆயிரம் கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 70 கோடியே 55 இலட்சமும், நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு 49 கோடியே 91 இலட்சம் ரூபாயும் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் எக்காரணம் கொண்டும் முடங்கி விடக் கூடாது என்பதற்காக கிராமப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2021 2022 முதல் தற்போது வரை 5 இலட்சத்து 79 ஆயிரத்து 106 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் தொகையாக 94 கோடியே 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில், 12 ஆயிரத்து 396 கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடங்களும், 11 ஆயிரத்து 816 சுய உதவிக் குழுக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் சுய உதவிக் குழு கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு வகையான கட்டடங்களும் இல்லாத 111 கிராம ஊராட்சிகளில் விரைவில் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை நகர்ப்புறங்களில் சந்தைப்படுத்தி விற்பனை செய்ய, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாவட்டத் தலைமையகங்களில் வணிக வளாகங்களை அமைத்து, அதற்கு 'பூமாலை வணிக வளாகம்' என்று பெயரிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், தமிழ்நாட்டில் உள்ள பூமாலை வணிக வளாகங்கள் ரூபாய் 5 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இன்றைக்கு அந்த வளாகங்களில் நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் வெற்றிகரமாக விற்பனையாகி வருகின்றன.

அதேபோல, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை முறையாக சந்தைப்படுத்த 'மதி' என்ற தனித்துவ முத்திரையுடன் அவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இணையதளம் வாயிலாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்ய www.mathisandhai.com எனும் இணையதளம் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

மேலும், கிராமப்புறம் மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், உற்பத்தி செய்யும் பொருட்களை பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவையுள்ளது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில், 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 'மதி எக்ஸ்பிரஸ்' மின் வாகனங்கள் தமிழ்நாடு முழுவதும் மகளிர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த செப்டம்பர் மாதம், தருமபுரி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், சிறுதானிய உணவு அரங்கத்தினை திறந்து வைத்தோம். அதைத் தொடர்ந்து, இப்பொழுது 32 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுடைய சிறுதானிய சிற்றுண்டி உணவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மாவட்டங்களிலும் விரைவில் இத்தகைய உணவகங்கள் திறக்கப்படவுள்ளன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்பினை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன் தொகையாக பார்க்கவில்லை. அதை நம் மகளிரினுடைய உழைப்பின்மீது வைத்துள்ள நம்பிக்கைத் தொகையாகத்தான் பார்க்கிறார்கள் என்பதை



நாங்கள் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்ற மாநிலங்கள் எல்லாம் சிந்திப்பதற்கு முன்பே கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டில் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட்டது. இந்தியாவுக்கே வழிகாட்டுகிற வகையில் காலை உணவுத்திட்டம், விடியல் பயணத் திட்டம் போன்றவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள்.

இப்படி ஒட்டுமொத்த மக்களுக்கும் பயனளிக்கக் கூடிய சமூக நலத் திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு என்றைக்கோ நடைமுறைப்படுத்திவிட்டது. இதற்கெல்லாம் காரணம், தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஒவ்வொரு காலகட்டத்திலும் மெருகேற்றப்பட்ட இந்த Dravidian Algorithm தான்.

இந்த Dravidian Algorithm-மின் சூட்சுமங்கள் அறிந்த தலைவராக இன்றைக்கு நம்மிடத்தில் இருப்பவர் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாட்டில் அவர் தலைமையில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி, தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகவே உழைக்கும். அதற்கு நாம் எந்நாளும் துணை நிற்போம் என்கிற உறுதியினை அளித்து, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த நேரத்திலும் என்னோடு தோளோடு தோள் நிற்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அவருடைய துறைக்கு அதிக நிதியொதுக்கீடு செய்தாலும், என்னுடைய துறையின்மீது அதிக அக்கறை வைத்திருக்கக்கூடிய நண்பர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவதாஸ் மீனா ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. என். முருகானந்தம், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனைத்து செயலாளர்களுக்கும், தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. உதயச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, ஐ.ஏ.ஏஸ்., அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. செந்தில்குமார், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அரசுச் செயலாளர் Dr. டாரேஸ் அகமது, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. இன்னொசென்ட் திவ்யா, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி திவ்யதர்சினி, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆனையத்தின் உறுப்பினர் செயலர் திரு. மேகநாதரெட்டி, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் துணை செயலாளர் திரு. பிரதாப், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அனைத்து உயர் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் திரு. தினேஷ் அவர்களுக்கும், என்னுடைய உதவியாளர் திரு. செந்தில், அரசு நேர்முக உதவியாளர் திரு. மணிராஜ், உதவியாளர் திரு. மணிகண்டன் ஆகியோருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத்தீர்மானங்களுக்கு உரிய பதில்களை பதிலுரையிலும் அறிவிப்புகளிலும் வெளியிட்டுள்ளோம். எனவே, அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம். ■











# ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார், இ.ஆ.ப, அவர்கள், 28.05.2024 அன்று நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் முதற்கட்டமாக திருச்செங்கோடு வட்டார வளர்ச்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்துவதற்கான பள்ளி மையப் பொறுப்பாளர்களுக்கு (சமையலர்களுக்கு) சமையல் குறித்த இரண்டு நாள் பயிற்சியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்த முதன்மைச் செயலாளர் அவர்கள், சமையல் உபகரணங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்தும், பயிற்சியினை நன்றாக கற்றுக் கொண்டு உணவினை சுத்தம் மற்றும் சுகாதாரமாக சமைத்து பள்ளி குழந்தைகளுக்கு பரிமாறுமாறும் பயிற்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் திருச்செங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட கூட்டப்பள்ளி பகுதியில் செயல்படும் பதுமை மகளிர் சுய உதவிக் குழுவின் அரிசிப் பைகள் மற்றும் தலையணை உறைகள் தயாரிக்கும் அலகினை ஆய்வு செய்தார். இதில் சம்மந்தப்பட்ட குழுவிற்கு நகராட்சி பகுதியில் போதிய இடம் வழங்கி தொழிலை விரிவுபடுத்திட அறிவுரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மல்லசமுத்திரம் வட்டாரம் மாமுண்டி அக்ரஹாரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் இலட்சுமி மகளிர் சுய உதவிக் குழுவின் நிலக்கடலை மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி அலகு, பாக்கு மட்டை தயாரித்தல் மற்றும் உற்பத்தியாளர் குழுக்களால் செயல்படுத்தப்பட்டு வரும் செயற்கை பட்டு உற்பத்தி தயாரிக்கும் அலகு ஆகியவைகளை ஆய்வு செய்து, தொழில் வளர்ச்சிக்குரிய ஆலோசனைகளை வழங்கிய முதன்மை செயலாளர் அவர்கள், மகளிர் திட்டத்தின் மூலம் சமுதாயம் சார்ந்த மக்கள் அமைப்புகளில் தயாரிக்கப்பட்டு வரும் உள் தணிக்கை செயல்பாட்டின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து உரிய நேரத்திற்குள் முடிக்கப்பட்டு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச. உமா, இ.ஆ.ப., மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. வடிவேல் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மகளிர் திட்ட பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் குறித்து புரிந்துணர்வு பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற துறை மாவட்ட நிலை அலுவலர்களுக்கான புரிந்துணர்வு பயிற்சியினை மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா அவர்கள் 19.06.2024 அன்று, சென்னை ரிப்பன் கட்டிட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. வே. பிச்சை, சென்னை மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிறுவனத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி. பா. மதுமதி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகராட்சி, வார்டு எண். 14 மற்றும் 21-களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் Pilot Survey தொடர்பான அனைத்துத் துறை அலுவலர்களுக்கான புரிந்துணர்வு பயிற்சி நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜானிடாம் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 21.06.2024 அன்று மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி 27.06.2024 அன்று வேதாரண்யம் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் Pilot Survey-யில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து வேதாரண்யம் வட்ட மற்றும் நகராட்சி அனைத்துத் துறை அலுவலர்களுக்கான புரிந்துணர்வு பயிற்சி மற்றும் திட்ட அறிமுக கூட்டம் நாகப்பட்டினம் மாவட்ட மகளிர் திட்ட, திட்ட இயக்குநர் திரு. எம். முருகேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்துத் துறை அலுவலர்களுக்கான பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்து மகளிர் பிரதிநிதிகளின் பங்களிப்பு குறித்தும், மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு குறித்தும் திட்ட இயக்குநர் அவர்கள் PPT வாயிலாக விரிவாக எடுத்துரைத்தார்கள். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட, வட்ட மற்றும் நகராட்சி அனைத்துத்துறை அலுவலர்களும் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், வார்டு உறுப்பினர்கள், கூட்டமைப்பு பிரதிகளில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சான்றிதழ்கள் வழங்குதல்



தர்மபுரி மாவட்டம், அரூர் ஒன்றியத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில் முகாம்" நடைபெற்றது. இந்த முகாமில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) மூலம் பல்வேறு தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு தருமபுரி மாவட்டஆட்சித் தலைவர் திருமதி. கி. சாந்தி, இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. ச. பத்ஹு முகம்மது நசீர், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வணிகம் வளர்க...

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



### சிறுதானியங்கள், தேன், புளி, மிளகு மற்றும் சணல் பைகள்

ஜவ்வாதுமலை FBO
திருவண்ணாமலை மாவட்டம்
கைபேசி : **99447 43075**



### கற்களால் செய்யப்பட்ட பொருட்கள்

செல்வ கணபதி மகளிர் சுய உதவிக் குழு
திருவண்ணாமலை மாவட்டம்
கைபேசி : **88700 67815**



### பட்டு புடவைகள், பட்டு நூலில் தயாரிக்கப்பட்ட வளையல்கள் மற்றும் காதணிகள்

முத்து மாரியம்மன் மகளிர்
சுய உதவிக் குழு
திருவண்ணாமலை மாவட்டம்
கைபேசி : **97914 27193**



### தரமான தேயிலைத் தூள் மற்றும் காபி பொடி

பசுமை சிறகுகள் மகளிர் சுய உதவிக் குழு
நீலகிரி மாவட்டம்
கைபேசி : **90439 60406**



### தினை, குதிரைவாலி மற்றும் கம்பினால் தயாரிக்கப்பட்ட பொடிகள்

மழைத்துளி மகளிர் சுய உதவிக் குழு
விழுப்புரம் மாவட்டம்
கைபேசி : **84280 94480**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க**

# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின்

# மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கான அறிவிப்புகள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 27.06.2024 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஊரகக் கடன்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் துறையின் மானியக் கோரிக்கையின் போது, தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு.




### 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதி

சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சமுதாய முதலீட்டு நிதியை பொருளாதார கடன் உதவியாக வழங்கப்படும். இந்த ஆண்டு 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும். இதற்காக மொத்த தொகை 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.




### 40,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 90 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

திறன் பயிற்சியானது கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இந்த ஆண்டு 10,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 60 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கப்படும். மேலும், சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 30,000 இளைஞர்களுக்கு 30 கோடி ரூபாய் செலவில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.




### ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் (சுமார் மூன்று இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் குழுக்களுக்கு) 30 கோடி ரூபாய் செலவில் புத்தாக்கப் பயிற்சி

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தகுதி மற்றும் திறமையை மேம்படுத்த அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிர்வாகம், நிதி மேலாண்மை மற்றும் தலைமைப்பண்பு ஆகியவற்றில் சிறப்பு புத்தாக்கப் பயிற்சி 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.



### 4,000 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 75 குழு நிறுவனங்களுக்கு இணைமானிய நிதி

4,000 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 75 குழு நிறுவனங்களுக்கு இணைமானிய நிதி திட்டத்தின் மூலம் முறையான நிதி நிறுவனங்களிடமிருந்து 150 கோடி ரூபாய் (இதனில், 50 கோடி ரூபாய் இணைமானிய நிதியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும்) கடன் உதவி வழங்கப்படும்.

2024-2025 ஆம் நிதியாண்டில், 4,000 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 75 குழு நிறுவனங்களுக்கு வங்கிக்கடன் 150 கோடி ரூபாயிலிருந்து 50 கோடி ரூபாய் இணைமானிய நிதியாக வழங்கப்படும்.




### 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு 10 கோடி ரூபாய் சுழல் நிதி

சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,000/- வீதம் அவர்களின் சேமிப்போடு, தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி கடன் இணைப்பு பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் 10 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.




### 7,500 தொழில் முனைவோர்களுக்கு ஐந்து கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் பயன் பெற்ற 7,500 தொழில் முனைவோர்களுக்கு ஐந்து கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.




### வளர் இளம் பெண்களுக்கு சுகாதார மேலாண்மை குறித்த பயிற்சி

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் வளர் இளம் பெண்களுக்கு மாதவிடாய்கால சுகாதார மேலாண்மை குறித்த பயிற்சி 200 வட்டாரத்தில் உள்ள 6,083 ஊராட்சிகளில் நான்கு கோடியே அறுபத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும். மேலும் ஊரகப் பகுதிகளில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுகாதார மேலாண்மை மன்றம் (Menstrual Hygiene Management Council) மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்படும்.



### பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சனைகளிலிருந்து பாதுகாப்பு சார்ந்த சட்ட விழிப்புணர்வு பயிற்சி

அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கும், பெண்களுக்கான சொத்துரிமை, குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சனைகளிலிருந்து பாதுகாப்பு சார்ந்த சட்ட விழிப்புணர்வு பயிற்சி மூன்று கோடியே இருபத்து நான்கு இலட்சம் ரூபாய்மதிப்பீட்டில் அளிக்கப்படும்.




### ஒரு மாவட்டத்திற்கு 3 மையங்கள் வீதம் 37 மாவட்டங்களில் 111 வானவில் மையங்கள்

“வானவில் மையம்" என்றழைக்கப்படும் பாலின வளமையமானது வட்டார அளவில் சமூகத்தில் பின்தங்கிய மற்றும் வளரிளம் பெண்கள் உடல் நலம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு தீர்வு காணும் வகையில் “வானவில் மையம்" என்றழைக்கப்படும் பாலின வள மையமானது, வட்டார அளவில் ஒரு மாவட்டத்திற்கு 3 மையங்கள் வீதம் 37 மாவட்டங்களில் 111 வானவில் மையங்கள் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாய்மதிப்பீட்டில் நிறுவப்படும். ஊட்டச்சத்து, உடல் மற்றும் மனநலம், குழந்தை திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி தீர்வு காண வழிவகை செய்யப்படும்.




### பெருநகர சென்னை மாநகராட்சியில் மதி கஃபே (Mathi Cafe)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் முன்மாதிரி அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 8 இடங்களில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மதி க.ஃ.பே (Mathi Cafe) அமைக்கப்படும்.




### வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இளைஞர் திறன் திருவிழாக்கள்

தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் பொருட்டு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் 50 மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும். மேலும், பின்தங்கிய 50 வட்டாரங்களில் பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இளைஞர்கள் பயிற்சியில் சேர்ந்து பயன்பெறவும் 25 இலட்சம் ரூபாய் செலவினத்தில் இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்படும்.




### சிறுதானிய போட்டிகள் மற்றும் திருவிழாக்கள்

மக்களிடையே ஊட்டச்சத்தின் அவசியத்தை உணர்த்திடவும், பாரம்பரிய உணவு வகைகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையிலும் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உட்கொள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளிடத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஊராட்சி / வட்டாரம் / மாவட்டம் மற்றும் மாநில அளவில் உணவு / சிறுதானிய போட்டிகள் மற்றும் திருவிழாக்கள் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.




### உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பருநாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட சூழல் நிதி

கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் வேலூர் மாவட்டங்களில் கரும்பு பயிரில் அதிக மகசூலை உறுதி செய்வதற்காக, தேர்வு செய்யப்பட்ட சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் 50 அலகுகள் அமைக்கப்பட்டு உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பருநாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, ஒரு அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய்சூழல் நிதியாக வழங்கப்படும்.




### சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உணவு தயாரித்தல் பயிற்சி

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையிலும் மாணவ / மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கிட, திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள 4,250 அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளுக்கு காலை உணவுத் தயாரிக்க சுய உதவிக் குழு உறுப்பினர்களை தேர்வு செய்து 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.




### மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய அடுக்குமாடி குடியிருப்புகளில் கண்காட்சிகள்

சென்னை போன்ற பெருநகரங்களின் அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள வாடிக்கையாளர்கள் மத்தியில் மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய மாவட்டத்திற்கு தலா 5 சமுதாயவளப் பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டு, 25 அடுக்குமாடி குடியிருப்புகளில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண்காட்சிகள் நடத்தப்படும்.

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கண்ட அறிவிப்புகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

**உலக மக்கள் தொகை தினம் [ ஜூலை 11 ]**

## மக்கள் தொகையும், நாட்டின் வளர்ச்சியும்...

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்நாட்டின் மக்கள் தொகையும் முக்கிய காரணியாகும். மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய அளவில் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் தேதியை உலக மக்கள் தொகை நாளாக அனுசரிக்க உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகளைக் களைந்திடவும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திடவும் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எளிய மக்கள் மத்தியில் குடும்ப நலத் திட்டமிடல்கள் பற்றிய கருத்தரங்குகள், பாதுகாப்பான கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஊடகங்கள் மூலம் ஏற்படுத்துதல் போன்றவை இத்தினத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மக்கள் தொகைக் கல்விக்கு முக்கியமளிப்பதுடன், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்கள் பற்றிய செயல்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்

# வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்

### வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்பது உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். சுய உதவிக் குழு மகளிர் தலைமையிலான கிராமப்புற நிறுவனங்கள் மூலம் கிராமப்புறங்களில் நிலையான தொழில் நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் கிராமப்புற சுய உதவிக்குழு மகளிரை மேம்பாடடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 31 மாவட்டங்களில் (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் தவிர) 120 ஒன்றியங்களில் உள்ள 3994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டம் ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு, தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்கல், திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள், திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகிய கூறுகளை உள்ளடக்கியது.

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு, பெண்கள் (பாலின சமத்துவம்), தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பம், கூடுகை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை இத்திட்டத்தில் அனைத்து கூறுகளுடனும் முழுமையாக இணைந்து செயல்படும். இத்திட்டத்தின் மூலம் தனிநபர் நிறுவனங்கள் மற்றும் குழு நிறுவனங்கள் என இரண்டு வகையான நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன.



### தனிநபர் நிறுவனங்கள்

தனி நபர் நிறுவனங்கள் கோவிட் நிதி உதவித் திட்டம், இணைமானிய நிதி உதவித் திட்டம் மூலம் உருவாக்கப்படுகின்றன. மேலும், தனிநபர் நிறுவனங்களை பதிவு செய்தல் போன்ற சட்டரீதியான செயல்பாடுகளை ஓரிட சேவை மையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

தொழிற்குழுக்கள், உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் போன்ற குழு நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன. குழு நிறுவனங்களுக்கு உற்பத்தியை அதிகரிக்கவும், உள்ளீடு செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும், குழு நிறுவனங்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிக்கவும் குழு நிறுவனங்களுக்கு மானியமாக தொடக்க நிதி வழங்கப்படுகிறது.

### உற்பத்தியாளர் குழுக்கள்

ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் 30 முதல் 150 உற்பத்தியாளர்கள், பொருளாதார அளவின் காரணமாக சிறந்த வருவாயைப் பெறுவதற்காகவும் உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைக்கவும் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. முக்கிய தகுதிகளை எய்தியதன் அடிப்படையில் உற்பத்தியாளர் குழுக்களுக்கு தொடக்க நிதி வழங்கப்படுகிறது.



### தொழிற் குழுக்கள்

10 முதல் 30 உறுப்பினர்கள் கூட்டு உரிமை மற்றும் வணிக நடவடிக்கைகளின் மீது பகிரப்பட்ட வளங்கள் மற்றும் லாபத்துடன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும், தரத்தைமேம்படுத்தவும் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் ஒன்றுபடுகின்றனர். தொழிற் குழுக்கள் உரிய தகுதியை எய்தியதன் அடிப்படையில் தொடக்க நிதியுதவி வழங்கப்படுகின்றன.





### உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் (PC)

இது ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் சேவையை வழங்குதல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர் குழுக்களின் முறையான உயர்நிலை ஒருங்கிணைப்பு ஆகும். உரிய தகுதிகளை எய்தியதற்குப் பின் இக்கூட்டமைப்புகளுக்கு ரூ.30 லட்சம் துவக்க நிதி வழங்கப்படுகின்றன. உறுப்பினர் எண்ணிக்கை பொதுவாக 300 முதல் 3,000 உற்பத்தியாளர்கள் வரை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இக்கூட்டமைப்புகள் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)

உற்பத்தித்திறன் மற்றும் விளைபொருட்களின் தரத்தை மேம்படுத்த உதவும் தொழில்நுட்பங்களைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, குறிப்பிட்ட பயிர்கள் மற்றும் கால்நடைகளை வளர்க்கும், அதே கிராமத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள முன்னோடி விவசாயிகள் (sparks) அடையாளம் காணப்படுகிறார்கள். இவர்கள் சிறந்த பயிற்சி நிறுவனங்களான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மை அபிவிருத்தி மையம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அறிவியல் மையம் மூலம் பயிற்றுனர்களுக்கான பயிற்சிகள் (ToT) அளிக்கப்படுகின்றன.

பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள் (SPARK)கள் மூலம், உற்பத்தியாளர்களுக்குச் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் மூலம் செயல் விளக்கத் தரைகளுடன் (Demo Plot) செயல் விளக்கம் அளிக்கப்படுகின்றன. உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களில் பயிற்சி 3 முதல் 12 மாதங்களுக்கு பயிர்களின் தன்மைக்குத் தகுந்தவாறு அளிக்கப்படுகின்றது.







### சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)

உள்ளூர் தேவைகள் மற்றும் திறன் இடைவெளிகளைபகுப்பாய்வுசெய்து,கிராமத்தில் உள்ள பாரம்பரிய மற்றும் உள்ளூர் தொழில்கள், இத்திட்டத்தால் கண்டறியப்படுகின்றன. ஆர்வமுள்ள இளைஞர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் கண்டறியப்பட்டுத் திறன் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

தேர்வு செய்த திறன்களை வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்ச உட்கட்டமைப்புடன் கூடிய உள்ளூர் பயிற்சியாளர்கள்/ நிபுணர்கள்/ தொழில்முனைவோர்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராமம் / வட்டார அளவில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைக்கப்பட்டு ஊதியம் பெறும் பணிகள் அல்லது சுயதொழில் வாய்ப்புகளை பெற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.



## மதி சிறகுகள் தொழில் மையம்

பல்வேறு திட்டங்களில் மூலமாக பல்வேறு பெயர்களில் செயல்பட்டுவரும் ஓரிட சேவை மையங்கள் மகளிர் தொழில் முனைவோரின் தொழில் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மதி சிறகுகள் தொழில் மையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

## இணை மானிய நிதி திட்டம் (Matching Grant Program)

இணை மானிய நிதி (MGP) என்பது தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், நிதி சேவைகளுக்காகவும் இத்திட்டத்தினால் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, கடன் பெற்றவர்கள் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்கப்படுத்திடவும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொழில்களுக்கான கடன் தொகையினை விரைவாக வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உரிய தொழில் திட்டம் தயாரித்தல், முறையான தகவல்களை அளித்தல் மூலம் கடன் பெறும் நேரத்தைக் குறைக்கவும், உரிய நேரத்தில் கடன் கிடைப்பதை உறுதி செய்யப்படுகிறது.




மகளிர் மேம்பாட்டிற்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் ஆக்கப்பூர்வமான பணிகளால் சுய உதவி குழு மகளிர் அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப் பெற்று வருகின்றனர் என்றால் அது மிகையில்லை.

சட்டம் என்ன சொல்கிறது?

# பெண்கள் மீது உடல்ரீதியான குற்றங்கள்

### இந்திய தண்டனைச் சட்டம் 326–ஏ: அமிலத்தைப் பயன்படுத்தி கொடுங்காயம் ஏற்படுத்துதல்

காயம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் காயம் விளைவிக்கும் என்று தெரிந்தே அமிலத்தை ஒருவர் மீது வீசுவதன் மூலம் அல்லது அமிலத்தை உள்ளுக்கு கொடுப்பதன் மூலம் அந்த நபரின் உடலில் ஏதேனும் ஒரு பகுதி நிரந்தரமாக அல்லது பகுதியாக சேதப்படுத்தி ஊனப்படுத்துவது அல்லது முகத்தை விகாரமாக்கி உருக்குலைப்பது போன்ற குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை முதல் ஆயுள் சிறைத் தண்டனை வரையும் வழங்கப்படுவதுடன் அபராதமும் விதிக்கப்படலாம்.

**குறிப்பு:** பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் அதற்கேற்ற வகையில் அபராதம் விதிக்கப்படும். இந்தச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் அபராதத் தொகை பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும்.

### இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 326–பி: அமிலத்தை வீசுதல் அல்லது வீச முயற்சி செய்தல்

காயம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அமிலத்தை வீசுவதன் மூலமோ, அமிலத்தை உள்ளுக்கு கொடுப்பதன் மூலமோ, ஒருவரது உடலில் ஒரு பகுதியை நிரந்தமாகவோ, பகுதியாகவோ சேதப்படுத்துதல், முகத்தை விகாரப்படுத்துதல், உருக்குலைத்தல், ஊனமாக்குதல் போன்ற குற்றங்களை செய்தவர்களுக்கு 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம்.

**குறிப்பு:** எரிக்கும் தன்மை வாய்ந்த, உடலுக்கு காயத்தை, தழும்புகளை ஏற்படுத்தக் கூடிய, உருவத்தைச் சிதைக்கக் கூடிய, உடல் ஊனத்தை ஏற்படுத்தக் கூடிய அமிலத்தன்மை வாய்ந்த எதுவும் அமிலம் என்றே கருதப்படும். மேலும் உடல் சிதைவை திரும்ப சரி செய்ய முடியாததாக இருக்க வேண்டும் என்பதில்லை .

### இந்திய தண்டனைச் சட்டத்தின் 354வது பிரிவு:

பெண்களின் மானத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் தாக்குதல் அல்லது வன்முறைத் தாக்குதல்களுக்கு ஓராண்டு முதல் முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

# ரூ.5,000 முதலீடு, மாதம் 2 லட்சம் டர்ன் ஓவர்...

## நாப்கின் தயாரிப்பில் கலக்கும் நாகமங்கலம் பெண்கள் குழு!

திருச்சி மாவட்டம் நாகமங்கலம் கிராமத்தில் இருக்கிறது 'சாய்பாபா மகளிர்குழு'. ஏழு பெண்கள் சேர்ந்து தொடங்கிய இந்தக் குழு மூலமாக இன்று மாதம் இரண்டு லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் செய்கிறார்கள். வருடத்திற்கு 60 ஆயிரம் நாப்கின்கள் தயாரித்து விற்பனை செய்கிறார்கள். உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார் குழுத்தலைவர் லலிதா.



லலிதா

*"ஒரு மகளிர் குழுவுல தேன், சிறுதானிய சத்துமாவு வகைகளை பேக்கிங் பண்ற வேலை பார்த்திட்டிருந்தேன். எனக்கு தையல் தெரியும். எங்க ஏரியாவுல இருந்த ஒரு டாக்டர், மகப்பேறு காலத்துல பயன்படுத்துற சானிட்டரி பேட் தயார் பண்ணச் சொல்லிக் கேட்டாங்க. அதுக்கான மெட்டீரியல் வாங்கி, சானிட்டரி நாப்கின்களை தயாரிக்க ஆரம்பிச்சேன். அதுல ஒரு நாளைக்கு 100 ரூபாய், 200 ரூபாய் கிடைச்சது. அப்புறம் எங்க ஏரியாவுல இருந்த மூணு பெண்கள் நாப்கின் தயாரிக்கிற பயிற்சியை எடுத்துக்கிட்டோம்.*

பயிற்சி முடிஞ்சதும், நாப்கின் தயார் செஞ்சு என் மகளுக்கும் அவளோட ஃபிரெண்ட்ஸுக்கும் கொடுத்தேன். எல்லாரும் நாப்கின் மிருதுவா இருக்குன்னு சொன்னாங்க. அதனால இதையே ஒரு தொழிலா பண்ணலாம்னு தோணுச்சு. ஆரம்பத்துல 5,000 ரூபாய் முதலீடு செய்து, வீட்டுலயே நாப்கின் தயாரிக்க ஆரம்பிச்சோம். தயாரிச்ச நாப்கின்களை விற்பனை செய்யணும்னா லேப் டெஸ்ட்டுக்கு கொடுக்கணும்னு சொன்னாங்க. சென்னை, மதுரை,

கோவைனு மூன்று லேப்கள்ல பரிசோதனை செஞ்ச மருத்துவ சான்றிதழோட நாப்கின்களை விற்க ஆரம்பிச்சேன். எங்க ஏரியாவுல இருந்த கடைகளுக்கும் தனியார் மருத்துவமனைகளும் கொடுத்திட்டிருந்தேன். நாப்கின் தேவை அதிகமானதால் எங்க கிராமத்துப் பெண்கள் சிலருக்கு பயிற்சி கொடுத்து ஏழு பேர் இணைஞ்சு சாய்பாபா மகளிர் குழுவைத் தொடங்கி நாப்கின் தயாரிப்புல இறங்கினோம்.

நாங்க தயாரிக்கும் நாப்கின்கள் தரமா இருந்தா, அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யறதா மகளிர் குழு மூலமா தகவல் கிடைச்சுது. அப்படி நாங்க தயாரிச்சுக் கொடுத்த நாப்கின்கள் பிடிச்சதால, திருச்சி மாவட்டத்துல இருக்குற எல்லா அரசு மருத்துவமனைகளுக்கும் மாசம் 3000 நாப்கின்கள் தயாரிக்கும் ஆர்டர் மகளிர் மேம்பாட்டு ஆணையம் மூலமா எங்களுக்கு கிடைச்சது. எங்களை மாதிரி 68 குழுக்கள்ல இருக்குற பெண்கள்தான் தமிழ்நாடு முழுக்க அரசு மருத்துவமனைகள்ல வழங்கப்படுற இலவச நாப்கின்களை உற்பத்தி பண்றாங்க. இந்த வாய்ப்பு எங்களுக்கு மிகப்பெரிய திருப்புமுனையா அமைஞ்சுது. அரசு மருத்துவ மனைக்குத் தயாரிக்கும் நாப்கின்களுக்கு நிறைய வரைமுறைகள் இருக்கு. 28 கிராம் பஞ்சு, மட்கும் ஷீட், ஸ்டிக்கர்களுக்கு மாற்றா நாடாக்கள்னு அவங்க கேட்டபடி நாப்கின்கள் தயாரிச்சோம். ஒவ்வொரு மாசமும் எங்க ஏரியாவுல இருக்கும் சுகாதாரத்துறை அலுவலகத்துல 3000 நாப்கின் களை வைக்கணும். அதுலேருந்து ஆறு நாப்கின்களை தரப் பரிசோதனை பண்ணி அப்ரூவ் பண்ணு வாங்க. அடுத்த சில நாள்கள்ல எங்களுக்கு நாப்கின்களுக்கான பணம் வந்துரும். இப்போ அரசு மருத்துவமனைகளுக்கு வருஷத்துக்கு 30,000 நாப்கின்கள் தயார் பண்ணித் தரோம்" என்ற லலிதாவைத் தொடர்கிறார், குழுவின் செயலாளர் மகாலட்சுமி.

"அடுத்தபடியா 'ஈஸி டச்' என்ற பிராண்டை


மகாலட்சுமி

தொடங்கினோம். ஒரு பாக்கெட்ல ஆறு நாப்கின்கள், எக்ஸ்எல், டபுள் எக்ஸ்எல்னு இரண்டு அளவுகள்ல தயாரிக்கிறோம். எங்க பிராண்ட்லேருந்து 30,000 நாப்கின்கள் தனியா விற்பனையாகுது. நாப்கின் தயார் பண்றது ரொம்ப ஈஸியான வேலைதான். ஆனா, சுத்தமா தயாரிக்கணும். அதனால கிளவுஸ், கேப் எல்லாம் போட்டுட்டு செய்வோம். நாப்கின் தயாரிப்பைப் பொறுத்தவரை பஞ்சை அரைக்கிறது, மோல்டு பண்றது, ராப் பண்றது, அயர்ன் பண்றது, எடை போடுறது, பேக் பண்றதுனு ஆறு பிரிவுகள் இருக்கும். ஆளுக்கு ஒரு வேலையா பிரிச்சுக்கிட்டோம். விற்பனை மற்றும் டெலிவரி வேலைகளை ஒருத்தர் பார்த்துக்கிறோம். இப்போ வருஷத்துக்கு ரெண்டு லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் பண்றோம். அடுத்தபடியா, 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் மூலமா கடனுதவிக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கோம். கடனுதவி கிடைச்சா பெரிய மெஷின்கள் வாங்கி நாப்கின் உற்பத்தி எண்ணிக்கையை அதிகப்படுத்துவோம். மொத்தத்துல பள்ளிப்படிப்பைக்கூட முடிக்காத நாங்க இன்னிக்கு தொழிலதிபர்களா வளர்ந்திருக்கோம். அதுல எங்களுக்கு ரொம்பவே பெருமை..." தலைநிமிர்ந்து சொல்கிறார்கள் குழுப் பெண்கள்.

நன்றி! அவள் விகடன்
16:07:2024

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ddugkytn2016@gmail.com

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

# கனவை நனவாக்கிய இயக்கம்

என் பெயர் வனிதா ஜெயக்குமார். நான் திருவாரூர் மாவட்டம் வடக்கு கொத்தத் தெருவில் வசிக்கிறேன். என் குடும்ப சூழ்நிலை காரணமாக என்னால் 9ம் வகுப்புக்கு மேல் படிப்பைத் தொடர முடியவில்லை. சிறுவயதிலேயே சிறு தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருந்தது. நான் பெண் என்பதால் என் பெற்றோர் அனுமதிக்கவில்லை. எனக்கு திருமணம் ஆனபிறகு என் கணவர் வீட்டிலும் இதே நிலைதான். எனது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், பிள்ளைகளின் கல்வியை தொடர்வதற்கும் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்தேன். பிறகு நானும் என் கணவரும் சொந்தமாக தொழில் தொடங்க முடிவு செய்தோம். என்னுடைய சிறுவயது கனவை நனவாக்க அதை ஒரு நல்ல வாய்ப்பாக எடுத்துக் கொண்டேன். தொழில் தொடங்க போதிய முதலீடு இல்லாமல் கஷ்டப்பட்டேன். வங்கியில் தனிநபர் கடன் பெறுவது குறித்து விசாரித்தோம். அப்போது தொழில் தொடங்கி எத்தனை வருடங்கள் ஆகிறது என்று கேட்டனர். இப்போது தொழில் தொடங்க உள்ளதால், குழுவில் உறுப்பினராக இருந்தால் வங்கியில் கடன் பெறலாம் என அறிவுரை வழங்கினர்.

தொடர்ந்து எனது தெருவில் வசிக்கும் பெண்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 12 மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு கற்பக விநாயகா மகளிர் சுய உதவிக் குழுவைத் தொடங்கினார்கள். அந்த குழுவில் உறுப்பினராக நான் இணைந்தேன். அப்போது தான் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ரூ.20,000/- நேரடிக் கடனாகப் பெற்றேன். அதை வைத்து எனது சிறு தொழிலை தொடங்கினேன். மேலும் எனது நிதி தேவைக்காக உள்கடனும் பெற்றேன். எஸ். ஜே. குமார் என்ற பெயரில் முறுக்கு, வத்தல், மிக்சர் வியாபாரம் ஆரம்பித்தோம். முதலில் நானும் என் கணவரும் மட்டுமே வியாபாரம் செய்து வந்தோம். எனக்கு 5000 ரூபாய் லாபம் கிடைத்தது. பிறகு இரண்டாவதாக 35,000 ரூபாய் கடன் வாங்கி எங்கள் தொழிலை மேலும் விரிவுபடுத்தினேன். முதலில் சிறிய கடைகளுக்கு விற்பனை செய்தோம். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. வாடிக்கையாளர்களே பரிந்துரைக்கத் தொடங்கினர். மாவட்டம் முழுவதும் சப்ளை செய்ய ஆரம்பித்தோம். அதிக அளவிலான உற்பத்திக்கு மனிதவளம் மட்டுமல்ல, இயந்திரங்களும் தேவைப்பட்டன. இயந்திரங்களை வாங்க தேவையான முதலீடு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

அப்போது தான் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அன்னை தெரசா பகுதி அளவிலான கூட்டமைப்பின் மூலம் PMFME திட்டத்தில் ரூ.40,000/- கடனாக வாங்கி இயந்திரங்களை வாங்கினேன். இது எங்கள் வணிகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தற்போது எங்களின் சிறு வணிகத்தை மொத்த வியாபாரமாக மாற்றினோம். இதன் மூலம் கிடைக்கும் லாபத்தில் சொந்தமாக தொழில் தொடங்க வேண்டும் என்ற எனது சிறு வயது ஆசையை நிறைவேற்ற உதவிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.







# நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

என்னுடைய பெயர் கீதாவாணி. சென்னை சவுகார்பேட்டையில் வசித்து வரும் நான் கடந்த 15 வருடங்களாக வீட்டில் இருந்தபடியே துணியில் பைகளை தயார் செய்து வியாபாரம் செய்து வருவாய் ஈட்டி வந்தேன். 2022ஆம் ஆண்டு பகுதியில் செயல்படும் ஸ்ரீ மஹாலஷ்மி மகளிர் குழுவில் உறுப்பினர் ஆனேன். இக்குழுவின் மூலம் வங்கியில் இருந்து தொழில் கடன் கிடைக்கப் பெற்றேன். குழுவில் உள்ள சக உறுப்பினர்களுடன் கலந்து பேசி, வியாபாரத்தை பெருக்கச் செய்தேன். காயின் பவுச், பெண்கள் கைப்பை, பயணப் பைகள் போன்றவற்றை துணியால் தைத்து விற்பனை செய்யத் துவங்கினேன்.



தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சிகளில் கலந்து கொண்டு, நான் தயாரித்த பொருட்களை விற்பனை செய்கிறேன். தான் தயாரிக்கும் பொருட்கள் தரமாகவும், கலைவண்ணம் மிகுந்ததாகவும் இருப்பதால், எனக்கு நிறைய வாடிக்கையாளர்கள் கிடைத்தனர்.



டெல்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான கண்காட்சியில் கலந்து கொண்டு எனது தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தேன். மேலும் சென்னை தீவுத் திடலில் நடைபெற்ற தமிழ்நாடு சுற்றுலா பொருட்காட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் வாயிலாக எனது பொருட்களை விற்பனை செய்தேன். நிறைய வாடிக்கையாளர் எனக்கு கிடைத்துள்ளதால் எனது தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் எனக்கு கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது. எனது பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





# வறுமையைப் போக்கிய வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மதுரை மாநகராட்சி, வார்டு -76, சுந்தரராஜபுரம் பகுதியில் ஆண்டாள் பொன் தாரகை மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் தொழில் செய்து வருமானம் இல்லாமல், வீட்டுப்பணி மட்டுமே செய்து கொண்டிருந்தனர். அதன் பின்னர் இக்குழுவில் உள்ள 12 பெண்கள் சேர்ந்து சேமிப்பு செலுத்தியும், உள்கடன் பெற்றும் சிறப்பாக செயல்பட்டு வந்தனர். இக்குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுழல் நிதியாக ரூ.10,000/- வழங்கப்பட்டது.

இந்நிலையில், இக்குழுவில் உள்ள 6 பெண்கள் சுய தொழில் மேற்கொள்ளும் விதமாக ரூ.2,00,000/- முதலீட்டில் சாம்பிராணி கப் தயாரிக்கும் தொழிலை சிறிய அளவில் துவக்கினர். இன்று இத்தொழிலானது சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் வங்கிக் கடனாக ரூ.4,00,000/-த்தை பெற்று, அதையும் மூலதனமாக வைத்து, சாம்பிராணி கப் தயாரிப்பதற்கான மூலப்பொருள், செண்ட் போன்றவை வாங்கவும், தங்களின் குடும்பத் தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொண்டனர்.

தற்போது கணிசமான வருவாய் பெற்று வரும் ஆண்டாள் பொன் தாரகை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



# ஏழைகளை ஏற்றம் பெற வைத்த இயக்கம்

நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் ஏழ்மையைப் போக்கி, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தினால் பயன் பெற்று, பொருளாதார வளர்ச்சி பெற்ற ஒருவர் தனது வெற்றிக் கதையை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

“என் பெயர் மேரி கோமதி, நான் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகராட்சி பகுதி, 32வது வார்டில் வசித்து வருகிறேன். மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான், குடும்பத்தை நடத்த மிகவும் சிரமப்பட்டு வந்தேன். இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், எங்கள் பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை சேர்ந்த 12 உறுப்பினர்களை இணைத்து அம்மன் சுய உதவிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினரான எனக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி வழங்கப்பட்டது.

மூன்று மாதம் முடிந்தவுடன் எங்கள் குழுவிற்கு சுழல் நிதியாக ரூ.10,000/-ம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வழங்கப்பட்டது. முதல் நேரடி வங்கிக் கடனாக ரூபாய் 3,00,000/- பெற்று சிறு தொழில் தொடங்குவதற்கு குழுக் கூட்டத்தில் திட்டமிட்டு, குந்தன் ஜுவல்லரி தொழில் தொடங்கப்பட்டது. நாங்கள் தயாரித்தப் பொருட்களை காலேஜ் பஜார், நகர மன்ற வளாகம், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களில் சமுதாய ஒருங்கிணைப்பாளர் மூலம் விற்பனை செய்தோம்.

அதிகமான பொருட்களை தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களை வாங்கிடத் தேவையான தொகை போதாததால், வேறு தொழில் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அடுத்தக் கட்டமாக கால்மிதியடி தயாரித்து விற்பனை செய்ய குழுவில் தீர்மானிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்கள் குழு உறுப்பினர்களுக்கு கீரமங்கலம் பேரூராட்சியில் கால் மிதியடி தயாரிப்பு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் மதுரையில் இருந்து கால் மிதியடி தயாரிப்பு இயந்திரம் வாங்கி கால் மிதியடி தயாரித்து தயார் செய்து, ஒரு கால் மிதியடி ரூ.40/- முதல் ரூ.150/- வரையிலான விலையில் ஒரு நாளைக்கு 25 மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டது. நாங்கள் தயாரித்த கால் மிதியடிகளை உள்ளூர் கடைகளில் விற்பனை செய்வதன் மூலம் எங்களின் வருமானம் அதிகரித்தது.

இதற்கிடையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் நேசக் கரங்கள் பகுதி அளவிலான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த கூட்டமைப்பின் மூலம் ஆதார நிதியாக ரூ.50,000/- வாங்கப்பட்டது. புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களை அணுகி நுண் இயற்கை உரம் தயார் செய்வதற்கு மனு கொடுத்தோம். எங்கள் மனுவிளை பரிசீலித்து, நகராட்சியில் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் கழிவுகளை பதப்படுத்தி நுண் இயற்கை உரம் தயாரிக்க ஓராண்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாங்கள் தயாரிக்கும் நுண் இயற்கை உரத்தை உள்ளூர் கடைகள், மாடித் தோட்டம், சிறு விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறோம். எங்கள் கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்த குழுக்களில் உள்ள உறுப்பினர்களில் 9 நபர்களுக்கு PMFME திட்டத்தின் கீழ் ரூ.40,000/- வீதம் ரூ.3,60,000/- கூட்டமைப்பின் மூலம் வழங்கப்பட்டது. தற்போது எங்கள் அம்மன் சுய உதவிக் குழு மற்றும் நேசக் கரங்கள் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று, வளமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு நல்ல திட்டமாக அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று பெருமிதத்துடன் கூறுகின்றனர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தால் வளம் பெற்ற சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.



## சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

## முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!







## முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!

புத்தகத்தைப் படிக்க என்னை **Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# நான்காயிரம் ஆண்டுகளின் கலைநயம் மிகுந்த நீலகிரியின் குறும்பர் ஓவியம் டிஜிட்டல் உலகிலும் பயணிக்கிறது!

உலகின் மிகப் பழமையான மலைத் தொடர்களுள் ஒன்றான மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள நீலகிரி "மலைகளின் அரசி" என்று அழைக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் வசிக்கும் குறும்பர் சமூகத்தினர் மலைப்பகுதிகளில் விளையும் தாவரங்களில் இருந்து பல்வேறு பச்சை இலைகளை சேகரித்து அவற்றிலிருந்து இயற்கை வண்ணங்களை எடுத்து ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தி வருகின்றனர். சுமார் நான்காயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த இயற்கை ஓவியங்கள் இன்றைய டிஜிட்டல் உலகிலும் தனித்துவம் மிக்கதாக உள்ளது. குறும்பர் ஓவியங்கள் குறித்து பாலசுப்பிரமணியம் என்பவர் கூறுவதை கேட்போம் வாருங்கள்.

"என் பெயர் பாலசுப்பிரமணி. நான் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டாரம், கெங்கரை ஊராட்சியில் உள்ள பாவியூர் வசித்து வருகிறேன். எங்களது பகுதியில் மலையரசன் தொழிற்குழு செயல்பட்டு வருகின்றது. எங்கள் தொழிற்குழுவில் உள்ள 10 உறுப்பினர்கள் குறும்பர் ஓவியம் வரைவதற்கு பல்வேறு பச்சை இலைகளை மலைப்பகுதிகளில் சேகரித்து வண்ணங்களை எடுத்து ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தி வருகின்றனர். குறும்பர் ஓவியங்கள் எங்களின் மூதாதையர் காலங்களிலிருந்து பல தலைமுறைகளாக வரையப்பட்டு வருகின்றன.

அந்த ஓவியங்கள் வரையப்படுவதை திரு. C.P. இராமசாமி ஐயர் அறக்கட்டளையின் மூலம் கண்டறிந்து உலகுக்கு பிரபலப்படுத்தப்பட்டது. எழுத்துப் பாறை என்பது நீலகிரி மலைப்பகுதியில் கோத்தகிரியில் பண்டைய காலத்திலிருந்து அறியப்படும் 3000 ஆண்டுகள் பழமையான ஓவியங்கள் வரையப்பட்ட பாறையாகும். பொதுவாக குறும்பர்கள் வேட்டையாடுபவர்கள். இவர்கள் தயாரிக்கும் மூலிகை மருத்துவ நிபுணத்துவமும், குறும்பர் ஓவியமும் எங்கள் முன்னோர்களின் பரம்பரைத் தொழில்களாகும். தற்போது நாங்கள் அவற்றை பத்திரமாக பாதுகாத்து அடுத்த எங்கள் இளம் தலைமுறையினருக்கு வழங்கி வருகின்றோம்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் எங்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனை தடைபட்டது. நிதி பற்றாக்குறையால் தொடர்ந்து தொழிலை செய்வதில் சிரமங்களைச் சந்தித்தோம். அந்த வேளையில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் அலுவலர்கள் எங்களை சந்தித்து, எங்கள் பகுதியில் உள்ளோரை ஒன்றிணைத்து எங்களுக்கு ஒரு தொழிற்குழுவை உருவாக்கித் தந்தனர்.

மேலும் குறும்பர் ஓவியத்தை தரம்பட வணிகமாக்கலுக்கு சமுதாயத் திறன் பள்ளி (CSS) வழியாக அதிக உற்பத்தி மற்றும் வணிகத்திற்கான பயிற்சியைத் தந்தனர். மேலும் எங்கள் தொழிற்குழுவிற்கு ரூ. 75,000/- தொடக்க நிதி வழங்கி எங்கள் தொழிலை வழக்கம் போல் நல்ல முறையில் இயங்கிட ஆதரவு வழங்கினர்.

தொடர்ந்து இத்திட்டத்தின் மூலம் விற்பனைச் சந்தையில் எங்களது தயாரிப்புகளைக் கொண்டு சேர்க்கவும், இணையதளம் வழியாக இயங்கும் வணிக நிறுவனங்களான அமேஸான், ஃபிளிப்கார்ட் போன்ற நிறுவனங்களின் வழியாக விற்பனைச் செய்யவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் எங்கள் வணிகத்தை மேம்படுத்தி எங்கள் வருவாயையும் பெருக்கியுள்ளோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.





# கூலி வேலை அனுபவம் தந்தது! சொந்த நிறுவனம் மதிப்பைத் தந்தது!!

எனது பெயர் கார்த்திக், நான் திருப்பூர் மாவட்டம், பட்டம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பெரியதோட்டம் பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு 33 வயது ஆகிறது. விவசாய குடும்பத்தை சேர்ந்த நான் டிப்ளமோ படித்துள்ளேன். எனது தந்தை விவசாயம் செய்து வருகிறார். எனது படிப்பினை முடித்து பின்பு எனது தந்தைக்கு உறுதுணையாக நானும் விவசாயத்தை கவனித்து வந்தேன்.


பின்னர் கோவையிலுள்ள பெப்ஸ் மெத்தை தயாரிக்கும் நிறுவனத்தில் உதவியாளராக பணியில் சேர்ந்து சுமார் 9 ஆண்டுகள் பணிபுரிந்து வந்தேன். அங்கு மாத ஊதியமாக ரூ.8,500/- முதல் ரூ.13,000/-வரை பெற்று வந்தேன். இந்நிலையில் எனக்கு திருமணம் நடைபெற்றது. நான் பெற்று வந்த வருமானம் திருமணத்திற்கு பிறகு போதுமானதாக இல்லை. எனவே, வேறு ஏதேனும் வேலைக்கு செல்வதா அல்லது சொந்தமாக தொழில் தொடங்கலாமா என குழப்பத்தில் இருந்தேன். பின்பு சக நண்பர்கள் மற்றும் எனது பெற்றோர்களுடன் ஆலோசித்து சொந்தமாக தொழில் செய்வதென முடிவு செய்து அதற்கான பணிகளை தொடங்கினேன். இருப்பினும் போதுமான நிதியின்மை காரணமாக தொழில் தொடங்குவது தாமதமாகிக் கொண்டிருந்தது.

எனது தாயார் 10 வருடங்களாக ஸ்ரீ தங்கம்மன் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினராக இருந்ததனால், மகளிர் குழு கூட்டங்களுக்கு என் தாயார் செல்லும்பொழுது, TNRTP திட்டம் குறித்தும், திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் மானியத்துடன் கூடிய தொழில் கடன் குறித்தும் தெரிந்துகொண்டு, என்னிடம் திட்டத்தின் பயன்கள் குறித்து கூறுவார். நானும் எங்களது ஊராட்சியிலுள்ள தொழில்சார் சமூக வல்லுநரின் மூலமாக TNRTP திட்ட அலுவலர்களை அணுகி தேவையான விவரங்களை தெரிந்துகொண்டு, இணை மானிய நிதித் திட்டத்தின் வாயிலாக கடன் வேண்டி விண்ணப்பித்தேன். மிகக் குறைந்த காலத்திற்குள்ளாக எவ்விதமான தேவையற்ற அலைச்சலுமின்றி திட்டத்தின் வாயிலாக எனக்கு 17,52,300/- இணை மானிய நிதிக்கடன் MGP கிடைத்தது. (அதில் எனது பங்களிப்பு 1,75,230/- ரூபாய், திட்டத்தின் இணை மானியம் 5,25,690/- ரூபாய், வங்கிக்கடன் 10,51,380/- ரூபாய்)

திட்ட உதவிக்கு பின்பு நான் எனது சொந்த கிராமத்திலேயே ரியல் என்ஜினியரிங் என்ற பெயரில் மெத்தை ஸ்பிரிங் உற்பத்தி செய்யும் நிறுவனத்தை தொடங்கி நடத்தி வருகிறேன். தற்பொழுது எனது நிறுவனத்தில் 5 முதல் 8 நபர்கள் வரை பணியாற்றி வருகின்றனர். அதன் வாயிலாக மாதத்திற்கு 4 மெட்ரிக் டன் கம்பி சுருள் உற்பத்திச் செய்து அதன் வாயிலாக ரூ.4,00,000/- முதல் ரூ. 5,00,000/- வரை வருவாய் ஈட்டி வருகிறேன். இதில் மூலப்பொருட்கள், மின் கட்டணம், வாடகை மற்றும் பணியாளர் ஊதியம் அனைத்தும் போக சுமார் ரூ. 50,000/- முதல் ரூ.60,000/- வரை எனக்கு இலாபம் கிடைக்கிறது.

நான் கூலிக்கு வேலை செய்த காலம் போய் தற்பொழுது நான் 5 நபர்களுக்கு ஊதியம் வழங்கும் முதலாளியாக உயர்ந்ததை மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். இந்த வாய்ப்பினை வழங்கி எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்துவரும் TNRTP திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- கார்த்திக்








# தனியாகப் போராடிய எனக்கு துணையாக TNRTP திட்டம் வந்தது!

எனது பெயர் சுகன்யா தேவி(வயது 39). தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரம், உ.அம்மாபட்டி ஊராட்சியில் வசித்து வரும்நான், இப்பகுதியில் செயல்படும் மாரியம்மாள் சுயஉதவிக் குழுவில் சுமார் 5 ஆண்டுகளாக உறுப்பினராக உள்ளேன். எனது கணவர் இறந்து 7 வருடங்கள் ஆகிறது. நான் ஆரம்பத்தில் நர்சரி பள்ளி ஒன்றில் ஆசிரியையாகப் பணி புரிந்தேன். அங்கு குறைவான வருமானம் மட்டுமே கிடைத்தது.

எனக்கு தையல் தொழில் தெரியும் என்பதால், நான் சொந்தமாக இரண்டு சிங்கர் தையல் மிஷின் மூலம் கடந்த 10 ஆண்டுகளாக உ.அம்மாபட்டி பகுதியில் பெண்களுக்கான ஆடைகளைத் தயார் செய்து விற்பனை செய்யும் தொழிலை சிறிய அளவில் செய்து வந்தேன். அதன் மூலம் எனக்கு மாதம் 7,000/- ரூபாய்வரை வருமானம் கிடைத்தது. குறைவான எண்ணிக்கையில் தையல் மிஷின்கள் இருந்ததால் குறைவான அளவே ஆர்டர்கள் கிடைத்தன. மேலும் பண்டிகை காலங்களில் ஆர்டர்கள் அதிகமாக வரும். ஆனால், உற்பத்தியை அதிகரிக்க போதுமான தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு என்னிடம் நிதி இல்லை. ஆகையால், குறைவான வருமானம் மட்டுமே பெற முடிந்தது.

நான் மகளிர் சுயஉதவிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் போது, கூட்டத்தில் தொழில் விரிவாக்கத்திற்காக TNRTP திட்டத்தின் மூலம் இணை மானிய நிதிக்கடன் வழங்குவதாக கூறினார்கள். அதன் பேரில் குழுக் கூட்டத்தில் எனக்கு தொழில்சார் சமூக வல்லுநரை அறிமுகம் செய்தனர். அந்த வாய்ப்பை எனக்குக் கடவுள் கொடுத்த வாய்ப்பாகக் கருதினேன். தொழில்சார் சமூக வல்லுநரின் வழியாக இணை மானிய நிதித் திட்டதின் கீழ் கடனுதவியைப் பெற இணைய வழி மூலம் விண்ணப்பித்து, உரிய ஆவணங்களை வங்கிக்கு வழங்கி, உத்தமபாளையம் கனரா வங்கியில் 30 சதவிகித மானியத்துடன் ரூ 3,00,000/- MGP கடனுதவியைப் பெற்றேன்.

அந்த நிதியில் 1 பவர் மிஷின், 1 கம்ப்யூட்டர் எம்பிராய்டரி மிஷின் போன்றவற்றை வாங்கியுள்ளேன். மேலும் 10 பெண்களுக்கு தையல் பயிற்சியும் அளித்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு மாதம் ரூபாய் 20,000/-வரை வருவாய் கிடைக்கிறது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் இணை மானிய நிதிக்கடன் என்னுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த மிகவும் உதவிகரமாக உள்ளது.

- சுகன்யா தேவி







# கோதுமை ரவை பொங்கல்

காலையில் எப்போதும் இட்லி, தோசை செய்து போரடித்து விட்டதா? உங்கள் வீட்டில் தோசை, இட்லி மாவும் இல்லையா? வீட்டில் கோதுமை ரவை உள்ளதா?அப்படியானால் அந்த கோதுமை ரவையைக் கொண்டு பொங்கல் செய்யுங்கள். இதுவரை நீங்கள் கோதுமை ரவை கொண்டு உப்புமா தான் செய்திருப்பீர்கள். ஆனால் அதைக் கொண்டு பொங்கல் செய்து பாருங்கள். இதனால் சுவை இன்னும் அதிகமாக இருக்கும். உங்களுக்கு கோதுமை ரவை பொங்கல் எப்படி செய்வதென்று தெரிந்து கொள்வோம் வாருங்கள்.



**தேவையான பொருட்கள்:**

கோதுமை ரவை - 1 கப், பாசிப்பருப்பு - 1/4 கப், தண்ணீர் - 4 கப், எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன், நெய் - 1 டேபிள் ஸ்பூன், சீரகம் - 1 டீஸ்பூன், மிளகு - 1 டீஸ்பூன், இஞ்சி - 1/2 இன்ச், பச்சை மிளகாய் 2, கறிவேப்பிலை - 2 கொத்து, உடைத்த முந்திரி - 15, பெருங்காயத் தூள் - 2 சிட்டிகை, மஞ்சள் தூள் - 1 சிட்டிகை, உப்பு - சுவைக்கேற்ப, நெய் - 1 டேபிள் ஸ்பூன்

**செய்முறை:**

முதலில் பாசிப்பருப்பை நீரில் 2 முறை கழுவி விட்டு, ஒரு வடிகட்டியில் போட்டு தனியாக வைத்து நீரை முற்றிலும் வடிகட்ட விட வேண்டும். பின்பு ஒரு பாத்திரத்தில் 4 கப் நீரை ஊற்றி அடுப்பில் வைத்து நன்கு கொதிக்க விட வேண்டும். பிறகு ஒரு குக்கரை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் மற்றும் நெய் ஊற்றி சூடானதும், சீரகம், மிளகு சேர்த்து நன்கு பொரிய விட வேண்டும். பின்பு அதில் பொடியாக நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை மற்றும் உடைத்த முந்திரியை சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

முந்திரியின் நிறம் லேசாக மாறத் தொடங்கியதும், அதில் பெருங்காயத் தூள், மஞ்சள் தூள் சேர்த்து கிளறி, பின் பாசிப்பருப்பை சேர்த்து 1 நிமிடம் வதக்க வேண்டும். அடுத்து கோதுமை ரவையை சேர்த்து நல்ல மணம் வரும் வரை வதக்க வேண்டும். பின் அதில் நன்கு கொதித்த சுடுநீரை ஊற்றி கிளறி, தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி, குக்கரை மூடி 3 விசில் விட்டு இறக்க வேண்டும். விசில் போனதும் குக்கரைத் திறந்து நெய் ஊற்றி கிளறினால், சுவையான கோதுமை ரவா பொங்கல் தயார்.

## பயனுள்ள சிறு குறிப்புகள்

- துருபிடித்த வடைச்சட்டியை நிமிடங்களில் சுத்தமாக மாற்ற உருளைக்கிழங்கை பாதியாக வெட்டிக் கொள்ளவும். உப்பு மற்றும் எண்ணெயை கலந்து வெட்டிய உருளையை தோய்த்து, அதை எடுத்து துருபிடித்த வடைச்சட்டியைத் தேய்த்தால் சுத்தமாக மாறிவிடும்.
- காய்கறியை நறுக்கும் கட்டிங் போர்ட்டை சுத்தம் செய்ய எலுமிச்சையில் உப்பைத் தடவி போர்ட்டை நன்றாக தேய்க்கவும். சிறிது நேரத்தில் கறைகள் எல்லாம் அகன்றுவிடும்.
- துணி மீது கறை ஏற்பட்டால் சாக் பீஸ்ஸைக் கொண்டு தேய்க்கவும். சிறிது நேரம் கழித்து சுண்ணாம்பைத் தட்டிவிடவும். துணிகளின் மேல் ஏற்பட்ட கறைகளை எளிதாக அகற்றிவிடலாம்.
- சாக் பீஸ்ஸை காடா துணியில் போட்டு வெள்ளி சாமான்கள் வைத்திருக்கும் இடத்தில் வைத்தால் அவை துருபிடிக்காமலும் கருத்துப் போகாமலும் பாதுகாக்கலாம்.
- தேவையில்லாத ஆணி ஓட்டைகளை அடைக்க, அங்கு சாக்பீஸை வைத்து மறைக்கலாம்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,10,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.



# உணவிலும் ஊட்டத்திலும்

## சுவை சேர்க்கலாம்

### பல வகை காளான்களால் நலம் பூக்கலாம்!





பெயர்: **காளான் தொழிற்குழு**
ஊராட்சி: **படூர்**
வட்டாரம்: **திருப்போரூர்**
மாவட்டம்: **செங்கல்பட்டு**

---

எங்களிடம் IOT முறையில் விளைவிக்கப்படும் உணவு வகை காளான்கள் விற்பனைக்கு உள்ளன.

தொடர்புக்கு:

**9942873684**

**தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்**

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th July 2024 Posted at Patrika Channel, Egmore.

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

மீனை சுத்தம் செய்து தர வேலையை செய்யுறோம்.
இதுல வர வருமானத்துல தான் வாழுறோம்.

TNULM மூலமா சுத்த செஞ்ச மீன் கழிவுகள் பயன்படுத்தி மீன் அமிலம் தயாரிச்சா கூடுதல் வருமானம் வரும்ணு சொன்னங்க. நாங்களும் பயிற்சி மூலம் தெரிஞ்சிகிட்டு மீன் அமிலம் தயாரிச்சிட்டு இருக்கோம்.

இப்ப சந்தை வாய்ப்பை உருவாக்க முயற்சி செஞ்சிட்டு இருக்கோம்.



## "உன்னையே நீ நம்பு ஒரு நாள் உயர்வு நிச்சயம்"

**மேலும் விவரங்களுக்கு**

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

**155 330 ல் தொடர்பு கொள்ளவும்**